# 3 ஏழு இறக்கைக் குருவியும் தெனாலிராமனும்

## வினாக்களுக்கு விடையளி

Question 1.
விஜயநகர அரசின் அவைப்புலவர் யார்?
Answer:
விஜயநகர அரசின் அவைப்புலவர் தெனாலிராமன் ஆவார்.

---

Question 2.
விஜயவர்த்தன அரசர் எப்படிப்பட்ட குருவியைக் கொண்டு வரும்படி கேட்டார்?
Answer:
விஜயவர்த்தன அரசர் தெனாலிராமனிடம், தனக்குக் காலையில் தங்க மஞ்சள் நிறத்திலும், நடுப்பகலில் சிவப்பு நிறத்திலும், இரவில் ஏழு வர்ணங்களிலும் உருமாறும் அற்புதக்குருவி ஒன்றை கொண்டு வந்து தர வேண்டும். மேலும், அது சில சமயம் மூன்று கால்களாலும், சில சமயம் இரட்டை கால்காளாலும் நடக்க வேண்டும். பிறகு ஏழு இறக்கைகளைக் கொண்டு வானில் பறக்க வேண்டும் என்று கேட்டார்.

---

Question 3.
குருவி கூறியதாகத் தெனாலிராமன் அரசவையில் சொன்னது என்ன?
Answer:
"அரசரிடம் போய் சொல், காலைப் பொழுதாகவும் இருக்கக்கூடாது, நடுப்பகல் பொழுதாகவும் இருக்கக்கூடாது, மாலைப்பொழுதாகவும் இருக்கக்கூடாது, வெளிச்சமாகவும்

இருக்கக்கூடாது, இருளாகவும் இருக்கக்கூடாது அந்த நேரத்தில் நானே எனது ஏழு இறக்கைகளால் பறந்து திரும்ப வந்து விடுவேன்” என்று குருவி கூறியதாக தெனாலிராமன் அரசவையில் சொன்னார்.

---

Question 4.
விகடகவி என்றால் என்ன?
Answer:
விகடகவி என்றால் நகைச்சுவை தோன்ற பாடுபவர் என்பது பொருள்.

---

## குறிப்புகளைக் கொண்டு கண்டுபிடி! மணிமகுடம் சூட்டிக்கொள்!

1. மணக்கும் எழுத்து.
Answer:
பூ

2. அரசரும், அமைச்சர்களும் கூடும் இடம்.
Answer:
அரசவை

3. நிலவும், விண்மீன்களும் வானில் தெரியும் நேரம்.
Answer:
இரவு

4. பாகற்காயின் சுவை.
Answer:
கசக்கும்

5. சிக்கலைத் தீர்க்க உதவும் குணம்
Answer:
சாந்தம்